# திருச்சியில் ‘கப்பலோட்டிய தமிழர்’ வ.உ.சி. சிலைக்கு மரியாதை!

## முன்னாள் அமைச்சர் கே.என். நேரு தலைமையில் !

திருச்சி, செப்.5- கப்பலோட்டிய தமிழன் அய்யா வ.உ.சிதம்பரனார் அவர்களின் 155வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (05.09.2026 சனிக் கிழமை) காலை 08.30 மணியளவில் திருச்சி நீதிமன்றம் அருகில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு கழக முதன்மைச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க் கட்சித் துணைத் தலைவர் மான கே.என்.நேரு தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தபட இருக்கிறது.

இந்நிகழ்வில் இந்நாள், முன்னாள் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில,மாவட்ட கழக, மாநகர கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதி நிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணியை சேர்ந்த நிர்வாகிகள்,கழக மூத்த முன்னோடிகள், செயல்வீரர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மாநகரச் செயலாளர் - மேயர் மு.அன்பழகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பி. கீதாஜீவன் அறிவிப்பு!



தூத்துக்குடி, செப்.5- தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பி. கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நாளை 6.09.2026 - ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் நடைபெறுகிறது.

மாவட்ட அவைத்தலைவர் ஜி.செல்வராஜ் தலைமை வகிக்கிறார். தலைமைக் கழகப் பிரதிநிதிகள் நல்ல சேதுபதி மற்றும் தமிழ் கா. அமுதரசன் மற்றும் ஜி.வி. மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ., தலைமைக் கழகப் பிரதிநிதிகள் கா.கருணாநிதி எம்.எல்.ஏ.

இக்கூட்டத்தில் தூத்துக்குடி மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள், மாநில அணி நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு அழைக்கிறேன்.

பொருள்: மாநகர நகர ஒன்றிய பகுதி பேரூர் வட்டம் கிளை மறு சீரமைப்பு குறித்து, செப்டம்பர் 15 முப்பெரும் விழா குறித்து

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### வாசுதேவநல்லூர் தொகுதி – பெரும்பத்தூர் – கண்டிகை பேரி உள்ளிட்ட பகுதிகளில்

# 30 நாட்டு செங்கல் சூளைகளுக்கு அனுமதி வழங்கிடுக!

## சட்டப்பேரவையில் ஈ.ராஜா வலியுறுத்தல்!



சென்னை, செப். 6- வாசுதேவ நல்லூர் தொகுதி பெரும்பத்தூர் - கண்டிகை பேரி மற்றும் புன்னை வனப்பேரி கிராமத்தில் சுமார் 30 நாட்டு செங்கல் சூளைகளுக்கு அனுமதி வழங்கிட வேண்டும் என்று சட்டப் பேரவையில் கழக உறுப்பினர் ஈ.ராஜா வலியுறுத்தினார்.

சட்டப் பேரவையில் இதுகுறித்து அவர் பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சங்கரன்கோவில் வட்டம் பெரும்பத்தூர் கிராமம், கண்டிகைபேரி மற்றும் புன்னைவனப்பேரி கிராமத்தில் செயல்பட்டு வந்த சுமார் 30 நாட்டு செங்கல்சூளைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. மேற்படி, நாட்டு செங்கல்சூளைகள் அரசு விதிமுறை களுக்குட்பட்டுதான் செயல்பட்டு வந்தது. அதற்கு சுற்றுச்சூழல் துறை மூலமாக அனுமதி வழங்கி, நாட்டு செங்கல்சூளைக்கு அனுமதி வழங்க வேண்டுமென்றும், அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட தாங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

அமைச்சர் டாக்டர் வே.க.ராஜீவ்: இது மாவட்ட நிர்வாகம் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். செங்கல் சூளை என்பது 3 technique ல்தான் அதை உருவாக்க வேண்டும். முக்கியமாக 800 மீட்டர் தள்ளி வீடுகள் இருக்கக்கூடாது என்று சில வரைமுறைகள் இருக்கின்றன. இரண்டு செங்கல்சூளைகளுக்கு இடையே 1 கி.மீ. distance இருக்க வேண்டும். Furnace இருக்க வேண்டும் என்று சில வழிமுறைகள் இருக்கின்றன. ஆனால், நாட்டு செங்கல்சூளைகள் அந்த வழிமுறைகளைப் பின்பற்றுவதே இல்லை. அப்படி உண்மையாகவே வழிமுறைகளைப் பின்பற்றியிருந்தால் கண்டிப்பாக அவர்களுக்கு இசைவாணை வழங்கப்படும்

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

### தலைமைக் கழக பிரதிநிதிகள் கே.ஈ.பிரகாஷ் எம்.பி. - இரா.ராஜீவ்காந்தி முன்னிலை!

# நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு அறிவிப்பு!



நீலகிரி, செப்.5- நீலகிரி மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் 10.9.2026 வியாழக்கிழமை காலை 11 மணி அளவில் மாவட்ட கழக அவை தலைவர் கே.போஜன் அவர்கள் தலைமையில், தலைமை கழக பிரதிநிதிகளான மாநில இளைஞர் அணி துணை செயலாளர் கே.ஈ.பிரகாஷ் MP. மற்றும் கழக கொள்கைபரப்பு இணை செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கழக தேர்தல் பணிக் குழு செயலாளர் கா. ராமசந்திரன் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்ட தீர்மானத்தின்படி, ஒன்றிய - நகர - பேரூர் கழக மறு சீரமைப்பு குறித்து.

கழக முப்பெரும் விழா மற்றும் கழக ஆக்கபணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தலைமைக் கழகப் பிரதிநிதிகள் முன்னிலையில்

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிக்கை!



திருவள்ளூர், செப்.5- திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 08-09-2026 செவ்வாய்க்கிழமை அன்று மாலை 05.00 மணிக்கு பொன்னேரி வேம்பாக்கத்தில் உள்ள ஏஏஎம் மஹாலில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பிரதிநிதிகளான, கழக விவசாய தொழிலாளர் அணி செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான அன்னியூர் சிவா மற்றும் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ப.அப்துல் மாலிக் முன்னிலை வகிக்கின்றனர்.

தலைமை செயற்குழு உறுப்பினரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன், இ.ஏ.பி.சிவாஜி, தலைமை செயற்குழு உறுப்பினர் எல்லாபுரம் ஜெ.மூர்த்தி, மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், வெ. அன்புவாணன், கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், ஜி. ஸ்டாலின், ஏ.கே.சுரேஷ், ஜி.ராபர்ட் ராஜ்துரை, மாவட்ட துணை செயலாளர்கள் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, எம்.எல்.ரவி, மு.கதிரவன், மாவட்ட பொருளாளர் எஸ். ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.எஸ். சுப்பிரமணி, பா.செ.குணசேகரன், பி.வெங்கடாஜலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, டாக்டர் கே.பரிமளம் விஸ்வநாதன்,

ஒன்றிய செயலாளர்கள் டி.கே.சந்திரசேகரன், கி. வேணுஆனந்த், மு.மணிபாலன், ஆ.சத்தியவேலு, ந.பரிமளம், ஜான்பொன்னுசாமி, மு.முரளிதரன், வே.ஆனந்த் குமார், நா.செல்வசேகரன், கா.சு. ஜெகதீசன், ஏ.ஆர்.டி.உதயசூரியன், நகர செயலாளர் ஜி.ரவிக்குமார், பேரூர்செயலாளர்கள் அபிராமி குமரவேல், பி.முத்து, க.சு. தமிழ் உதயன், இரா.அறிவழகன், பங்கேற்கின்றனர், ஒன்றியச் செயலாளர் ஆ.ராஜா வரவேற்கிறார்.

அதுசமயம் மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமை செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி ஒன்றிய, நகர, பேரூர் கழகம் மறுசீரமைப்பு குறித்து, கழக வளர்ச்சி பணிகள் குறித்து இதில் ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தலைமைக் கழக பிரதிநிதிகள் பேரா.ஜெ.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி. – ஆஸ்டின் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெறுகிறது

# சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அறிவிப்பு!



சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் 09.09.2026 அன்று புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன் தலைமையிலும், தலைமைக் கழக பிரதிநிதிகள் பேரா.ஜெ. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., மற்றும் ஆஸ்டின் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலையில் லட்சுமிபுரம் மெயின் ரோட்டில் உள்ள GPL திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது. மேலும் இந்நிகழ்ச்சியில் வடசென்னைநாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதிவீராசாமி MP, மாநில மீனவர் அணி துணைத்தலைவர் கே.பி. சங்கர் EX MLA, ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

மேற்படி இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, பேரூர் வட்ட கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இப்போதுஉறுப்பினர் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாதவரம் எஸ்.சுதர்சனம்**
செயலாளர், சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

# கிருஷ்ணகிரி கிழக்கு - மேற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர்கள் தே.மதியழகன் – ஒய்.பிரகாஷ் அறிவிப்பு!





கிருஷ்ணகிரி, செப். 5- கிருஷ்ணகிரி கிழக்கு - மேற்கு மாவட்டச் செயலாளர்கள் தே. மதியழகன் - ஒய். பிரகாஷ் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க. தலைமைக் கழக செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின்படியும், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்கவும், கழக அமைப்புகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் கழக மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, கிளைக் கழகம் முதல் வட்டம், பேரூர், ஒன்றியம், நகர, பகுதி, மாநகர உள்ளிட்ட அனைத்து கழக அமைப்புகளிலும் மேற்கொள்ளப்படவுள்ள மறுசீரமைப்பு மற்றும் அமைப்புத் தேர்தல் பணிகள் தொடர்பாக தலைமைக் கழகம் வகுத்துள்ள வழிகாட்டுதல்களை விளக்க வும், கழக நிர்வாகி களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைப் பெறவும் தலைமைக் கழகப் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் நாளை 06.09.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில், கிருஷ்ணகிரி குறிஞ்சி மஹால் திருமண மண்டபத்தில், மாவட்டக் கழக அவைத் தலைவர் நாகராஜ் தலைமையில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் முன்னிலை வகிக்கிறார் அதே போல மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் 06.09.2026 ஞாயிற்றுக்கிழமை மதியம் 3.00 மணியளவில் மேற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மேற்கு மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ் தலைமையில் மேற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷ் முன்னிலை வைக்கிறார்

இக்கூட்டத்தில், கிருஷ்ணகிரி மாவட்ட கழக மறுசீரமைப்புப் பணிகளுக்காக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள தலைமைக்கழகப்பிரதிநிதிகள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள் மற்றும் மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் திருமதி. நாமக்கல் ப. ராணி அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்து, கழக மறுசீரமைப்பு, அமைப்புத் தேர்தலுக்கான வழிமுறைகள் மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து விரிவான ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்ற உள்ளனர்.

மேலும், இக்கூட்டத்தில் செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் முப்பெரும் விழாவை சிறப்பாக நடத்துவது குறித்தும், கழக ஆக்கப்பணிகளை மேலும் தீவிரப் படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளது.

எனவே, இம்முக்கியத்துவம் வாய்ந்த அவசர செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநிலக் கழக அணிகளின் நிர்வாகிகள் மாநகர, நகர, ஒன்றிய, பேரூர் , பகுதி கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழக அணிகளின் தலைவர்கள், மாவட்டக் கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# தேனி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் அறிக்கை!



தேனி, செப்.5- தேனி தெற்கு மாவட்டக்கழக செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தேனி தெற்கு மாவட்டக்கழக தி.மு.க. செயற்குழு கூட்டம் நாளை (06.09.2026 - ஞாயிற்றுக் கிழமை), காலை 10.00 மணிக்கு ஆண்டிபட்டியில் உள்ள மேனகா ஹால், ஐக் கம்பட்டியில் மாவட்டக்கழக அவைத்தலைவர் த. மனோகரன் தலைமையில் தலைமைக்கழக பிரதிநிதிகள் சுபா சந்திரசேகர், கவிஞர் காசி முத்துமாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் தேனி தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் மாநில நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக்கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்டத்தில், கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி நகர, ஒன்றிய, பேரூர் கழகம் மறு சீரமைப்பு குறித்து.

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு தேனி தெற்கு மாவட்டக் கழக செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் அறிக்கை!



கள்ளக்குறிச்சி, செப்.5: கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் அறிக்கை வருமாறு :.

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயற்குழு ஆலோசனைக் கூட்டம் நாளை 06-09-2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் கள்ளக்குறிச்சி ராஜா தியேட்டர் பின்புறம் உள்ள கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் தலைமையில், தலைமைகழகபிரதிநிதிகள் ஆர்.டி.அரசு, கே.பி.சங்கர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு கருத்துரை வழங்க உள்ளனர். இக்கூட்டத்திற்கு உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜி.ஆர். வசந்தவேல் மற்றும் கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் ஆகியோர்கள் முன்னிலை வகிக்கின்றனர்.

அதுசமயம் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்டக்கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. 22-08-2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில், கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி ஒன்றிய, நகர,பேரூர் கழக மறுசீரமைப்பு குறித்தும்,

2. செப் -15 அண்ணா அறிவாலத்தில் நடைபெறும் கழக முப்பெரும் விழா குறித்தும்,

3. கழக ஆக்கப்பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.